**கோவிட்-19 தொற்று பரவல் காரணமாக ப்ராம்ட்டன் நகர விழாக்களும் நிகழ்ச்சிகளும் ஏற்கெனவே ரத்து செய்யப்பட்டன, அந்த ரத்தானது செப்டம்பர் மாதம் 7 ஆம் தேதி உள்பட மற்றும் அதுவரை நீட்டிக்கப்பட்டுள்ளது**

ப்ராம்ப்ட்டன், ON (ஜுலை 21, 2020) நகரின் விழாக்கள், இதர நிகழ்வுகள், நிகழ்த்து கலை நிகழ்ச்சிகள் மற்றும் நகரின் கட்டிடங்கள் மற்றும் தி ரோஸ் போன்ற நிகழ்த்துகலை மையங்களில் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கான அனுமதிகள் ஆகியவை ரத்து செய்யப்படுகின்றன; கோவிட்-19 தொற்று பரவல் காரணமாக, இவையனைத்துமே, செப்டம்பர் 7, 2020 தேதியில் அனுசரிக்கப்படுகின்ற தொழிலாளர் தினம் உள்ளிட்ட நாள் முடிய, ரத்து செய்யப்படுகின்றன. இப்படி நீட்டித்து ரத்து செய்யப்படுவதானது, ப்ராம்ப்ட்டன் அவசர கால மேலாண்மை அலுவலகம், மற்றும் ரீஜன் ஆஃப் பீல் அமைப்பு ஆகியவற்றின் வழிகாட்டுதலின் பேரிலும், மற்றுமுள்ள அண்டை நகர நகராட்சிகளுடன் ஒத்துப்போகும் வகையிலும் செய்யப்படுகிறது.

நகர நிர்வாகமானது, இப்படியாக ரத்தாவதின் தாக்கங்களைத் தணிப்பதற்காக, நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்பவர்கள் மற்றும் நகரின் கட்டிடங்களில் வாடகைக்கு இருப்பவர்களுடன் இணைந்து பணியாற்றுகிறது; மற்றும் சாத்தியமான எதிர்காலத் தேதிகளைத் தீர்மானித்து, பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதலுக்கு ஏற்ப, இவற்றை இணைந்து நடத்த பணியாற்றும்.பெரும் கூட்டம் கூடும் நிகழ்ச்சிகளுக்கு ஒன்ட்டேரியோ அரசு மற்றும் பீல் பப்ளிக் ஹெல்த் அமைப்பின் அறிவுறுத்தல் கிடைக்கும் வரை, புதிய நிகழ்ச்சிகள் எவற்றுக்கும் முன்பதிவு செய்வது பற்றி கருதப்படமாட்டாது.

பொழுதுபோக்கு மற்றும் சமுதாயக் கூடங்கள் மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர நூலகங்கள் உள்ளிட்ட நகர் மன்ற அரங்கம், மற்றும் ப்ராம்ப்ட்டன் நகரின் பெரும்பாலான இதர கட்டிடங்கள் யாவும் கோவிட் -19 தொற்று பரவுதலைத் தடுப்பதில் உதவுமுகமாக அடுத்த அறிவிப்பு வரும் வரை மூடப்பட்டே இருக்கும்.

கோவிட்-19 தொற்று பரவலை ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் எதிர்கொண்டு சமாளிப்பது பற்றிய மிக சமீபத்திய புதுத்தகவல்களுக்கு வருகை புரியவும்: www.brampton.ca/COVID19.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல்தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca